www.Padasalai.Net

திருப்பத்தூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.005/CG/ஒபக/2024 நாள்: 18.09.2024

பொருள் : நான் முதல்வன்- உயர்கல்வி வழிகாட்டி திட்டம் -9 & 10ஆம் வகுப்பு மற்றும் 11 & 12 ஆம் வகுப்பு - அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள உயர்கல்வி வழிகாட்டி பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் முதுகலை ஆசிரியர்களுக்கு மாவட்ட அளவிலான ஒரு நாள் பயிற்சி நடைபெறுதல்- ஆசிரியர்களை பயிற்சியில் கலந்துகொள்ள பணியிலிருந்து விடுவித்தல்- சார்பு.

பார்வை : சென்னை, தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, மாநில திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 1292/ஆ1/நா.மு.16-17/2021 நாள்: 24.08.2024

--------------------

அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 9 & 10ஆம் வகுப்பு மற்றும் 11 & 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் உயர்கல்வி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் வழங்குவதற்காக, உயர் கல்வி வழிகாட்டி பயிற்சி அளிப்பதற்கு ஏதுவாக, பட்டதாரி மற்றும் முதுகலை ஆசிரியர்களுக்கு மாவட்ட அளவில் ஒரு நாள் பயிற்சி வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்குவதற்கு, மாவட்டத்திற்கு 4 கருத்தாளர்கள் வீதம் (30.08.2024 அன்று 2 DIET விரிவுரையாளர்கள் 2 பட்டதாரி ஆசிரியர்களுக்கு விழுப்புரம் மாவட்டத்திலும், 03.09.2024 அன்று 2 DIET விரிவுரையாளர்கள், முதுகலை ஆசிரியர்களுக்கு சென்னையிலும் நடைபெற்ற மாநில அளவிலான பயிற்சியில் கலந்துகொண்டனர்.

இக்கருத்தாளர்களை கொண்டு, கீழ்கண்ட அட்டவணையின்படி உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி உயர்கல்வி வழிகாட்டி பட்டதாரி மற்றும் முதுகலை ஆசிரியர்களுக்கு மாவட்ட அளவில் ஒரு நாள் பயிற்சி காலை 9.30 மணி முதல் 5.00 மணி வரை ஜோலார்பேட்டை ஒன்றியம், வக்கணம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும்.

| வ.எண். | பயிற்சி நாள் | பயிற்சியில் பங்கேற்கும் உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்கள் |
|---|---|---|
| 1. | 20.09.2024 | மேல்நிலைப்பள்ளி முதுகலை ஆசிரியர்கள் |
| 2. | 23.09.2024 | அரசு உயர்நிலைப்பள்ளிகள் பட்டதாரி ஆசிரியர்கள் |
| 3. | 24.07.2024 | அரசு மேல்நிலைப்பள்ளிகள் பட்டதாரி ஆசிரியர்கள் |

www.Padasalai.Net



எனவே, அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளியில் உள்ள உயர்கல்வி வழிகாட்டி பயிற்சி பெற்ற ஆசிரியர்களை (பட்டதாரி மற்றும் முதுகலை ஆசிரியர்கள்), உரிய நேரத்தில் பயிற்சியில் கலந்துக்கொள்ள பணியிலிருந்து விடுவித்து அனுப்பி வைக்குமாறு அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

குறிப்பு : 1. பயிற்சியில் மதிய உணவு வழங்கப்படும்.

2. மாணவர்கள் எண்ணிக்கை 250 மேல் இருக்கும் பள்ளிகள் 2 பட்டதாரி ஆசிரியர்களை பயிற்சிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

முதன்மைக்கல்வி அலுவலர்,
திருப்பத்தூர் மாவட்டம்.

பெறுநர்: அனைத்து அரசு உயர்/ மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்,
திருப்பத்தூர் மாவட்டம்.

நகல் : 1. முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இராணிப்பேட்டை அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.

2. மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலைக்கல்வி), திருப்பத்தூர்.